***(வலைபின்னல் மாற்றுமுறை)***

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1999 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்கசபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, யூன் மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 5.25* *தபாற் செலவு : ரூபா 3.50*

**1999 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்க சபை (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ.80/95.*

## பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்க சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கல்லூரியொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கல்லூரியோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதன்முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ; முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கல்லூரியின் குறிக்கோள்களும் கருமங்களும் இதுவரை பாலக்க சபையினால் முகாமை செய்யப்பட்டு கொண்டுநடாத்தப்பட்டு வந்துள்ளதாதலாலும் ;

அத்துடன் சொல்லப்பட்ட பாலக்க சபை கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்க சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "கல்லூரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் இப்போதுள்ள உறுப்பினர்கள் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்க சபை" என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன்; அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன்,அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். பேருவளை மாலேவன ஸ்ரீ ஞானிஸ்ஸர ஆயுர் வேத மருத்துவக் கல்லூரியின் பாலக்க சபையைக் கூட்டிணைத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பாரம்பரியமான ஆயுர்வேத மற்றும் தொடர்புடைய மருத்துவ அறிவுறுத்தல்களை வழங்கும் ஒரு தேசிய நிலையமாகக் கல்லூரியினை நடாத்துதலும் பராமரித்தலும் நிர்வகித்தலும் ;

(ஆ) பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவமுறையில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் நோயுள்ள வர்களுக்கு இலவச சிகிச்சையளிப்பதற்குமென ஆயுர்வேத வைத்தியசாலையொன்றைத் தாபித்தல் ;

(இ) ஆயுர்வேத மருத்துவமுறையில் தனிமையுடையவர்களெனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்கான ஆயுர்வேத மருத்துவப் பேரவைக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(ஈ) கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பராமரித்தலும் கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்களை நிறுவிப் பராமரித்தலும் அவற்றுக்கு வேண்டிய சாதனங்களை வழங்குதலும் ;

(உ) இக்கல்லூரியில் நான்கு ஆண்டுகளுக்கான கல்வி நெறியைப் பயனிறைவுடன் பின்பற்றுவோருக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் நியமிக்கப்படும் பரீட்சகர் சபையினால் நடாத்தப்படும் பரீட்சையொன்றின் பின்னர் எம்.ஜீ.ஏ.எஸ். (மாலேவன ஞானிஸ்ஸர ஆயுர்வேத சாஸ்திரி) பட்டம் வழங்குதல் ;

(ஊ) ஆயுர்வேத மருத்துவமுறையில் ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், ஊக்குவித்தல் அத்துடன் பேணி வளர்த்தல்;

(எ) பல்வேறு செயற்றிறன்வாய்ந்தவர்களாகவும் இலங்கையில் பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவ முறையினை மேம் படுத்துதல், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்களாகவும் உள்ள ஆட்களுக்கு வருடாந்தம் கௌரவ சான்றிதழ்களை வழங்குதல் ;

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் கூட்டுத்தாபனம் வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் எடுக்கவும் அல்லது திரட்டவும் அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக் கமர்த்தல், வேலையிலீடுபடுத்தல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றுக்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதால் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**5**. (1) உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், அவர்களின் பதவிக்காலத்தின் நியதிகள் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக விராத விதிகளை பொதுக்கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்க உரித்துடையவரான மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக் கொண்டு காலத்திற்குக்காலம் ஆக்குவதற்குக் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்பட லாம் அல்லது நீக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கழகத்துக்குச்செலுத்தப்படற்பாலனவும் அதனால் செலுத்தப் படற்பாலனவையு மான கடன்கள்.*

**6**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முந்திய நாளன்று கல்லூரிக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப் படல், கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன்

அந்த நாளில் கல்லூரிக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத் திருக்கலாம்.*

**7.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் குத்தகை, கொள்வனவு, மானியம், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையானவை ஆகியவற்றின் பயனைக்கொண்டு அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாகவும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தா பனத்தின் விதிகளுக்கு அமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத் தின் இலச்சினை.*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக இச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவ தினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**9.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும், அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களின்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ, பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற் படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*